<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு</u>

முன்னிலை : வி.சுரேஷ், B.A., B.L.,

இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ம் நாள் செவ்வாய்கிழமை

<u>OS.No.98 of 2026</u>

<u>(CNR No.TNED01-000495-2026)</u>

M.கனிகா - வாதி

/ எதிர் /

1) நிஷாந்த்
2) சக்திவேல்
3) S.விசாலி
4) ஜெகதீசன் - பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 10-03-2026-ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.பிரபாகரன் அவர்கள் ஆஜராகியும் வழக்கின் முதல் வாய்தா இன்று இருந்த நிலையில், வாதியின் வழக்கறிஞர் இவ்வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே பைசலாகிவிட்டது என்று குறிப்பாணை தாக்கல் செய்ததின் பேரில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>தீர்ப்புரை</u>

இந்த வழக்கானது தாவா சொத்து குறித்து 2 முதல் 4ம் பிரதிவாதிகளின் பெயருக்கு, மேற்படி கடனுக்கு உத்தரவாதத்திற்காக, வாதி ஏற்படுத்திக் கொடுத்துள்ள,, பெருந்துறை சார்பதிவாளர் அலுவலகத்திய 1 புத்தகம் 5583/2024 ம் எண் ஆவணமாகப் பதிவாகியுள்ள கிரைய ஆவணத்தை ரத்து செய்து உத்தரவிட்டும், பிரதிவாதிகள் தாவாச் சொத்துக்கள் குறித்து எவ்வித வில்லங்கமும் ஏற்படுத்த தடை விதித்து ஒரு நிரந்தர

உறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டியும், வாதிகளை தாவாச் சொத்திலிருந்து சட்டப்படியான வழிகளில் இன்றி வலுக்கட்டாயமாக வெளியேற்றக்கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டியும் மற்றும் தாவா செலவு தொகைக்கும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதி தரப்பில் வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே பைசலாகிவிட்டது என்று ஏற்கனவே குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது. அக்குறிப்பாணை பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே பைசலாகிவிட்டபடியால் தள்ளுபடி செய்யப்படுகிறது. TNCFSV சட்டம் U/s 78 ன்படி பிடித்தம் போக முழு நீதிமன்ற முத்திரைக் கட்டணத்தை திரும்ப வழங்க உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இன்று 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 10 ம் நாள் இத்தீர்ப்புரை என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒ/ம்)

II கூடுதல் மாவட்ட நீதிபதி,

ஈரோடு

Draft/Fair Judgment

OS No.98/2026

Date : 10-03-2026

II ADC, Erode